# உச்ச நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைத்துவச் சபை - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உச்ச நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைத்துவச் சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) உச்ச நீதிமன்ற தொகுதி கட்டிடங்கள் அமைந்துள்ள காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான கட்டிடத்திலுள்ள இடவசதிகளை பல நிறுவனங்கள் பயன்படுத்தியிருந்ததுடன் அதற்காக சபையால் அந் நிறுவனங்களிலிருந்து கட்டிட வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான ரூபா 187,500 தொகையான மோட்டார் வாகன பராமரிப்புச் செலவுகள் மூலதனச் செலவுகளாக கணக்குவைக்கப்பட்டிருந்தன.

#### 1.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் கடன்பட்டோரின் பெறுமதி ரூபா 4,338,535 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,303,019 கூட்டுமொத்த தொகை 1 இலிருந்து 5 ஆண்டுகள் வரையான காலமாகவும் ரூபா 44,729 கூட்டுமொத்த தொகை 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் அறவிடப்படாது காணப்பட்டதுடன் ஐயக் கடன்களுக்காக எதுவித ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் கடன்கொடுத்தோரின் பெறுமதி ரூபா 390,434 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 158,923 கூட்டுமொத்த தொகை 1 இலிருந்து 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலமாகவும் ரூபா 231,509 கூட்டுமொத்த தொகை 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

கீழே தரப்பட்டுள்ள கணக்கு விடயங்களுக்கு முன்னால் காட்டப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருவில்லை.

| | **விடயம்** | **பெறுமதி** | **சமர்ப்பிக்கப்படாத எழுத்துமூலச்சான்று** |
|---|---|---|---|
| | | **ரூபா** | |
| (அ) | கட்டிடம் | 2,421,470,587 | உரிமையினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் |
| (ஆ) | காணிகள் | - | மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியும் காணி உறுதியும் |

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** |
|---|---|---|
| (அ) | நி.பி 751 | மீளாய்வாண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | நிலையான சொத்துக்கள் பதிவேடு முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை |
| (இ) | 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 2004/01 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றுநிருபம் | வரைபு இறுதிக் கணக்குகளும் வரைபு ஆண்டறிக்கையும் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபம் | |
| | I. 5.2.5 ஆம் பிரிவு | கட்டுப்பாட்டுச் சபை அங்கீகரித்த பாதீடு மீளாய்வாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் நீதி அமைச்சிற்கும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு இடம்பெற்றிருக்க வில்லை. |
| | II. 7.4.4 ஆம் பிரிவு | ஊழியர் செயற்திறனை மேம்படுத்துவதற்கு முறைப்படியாக ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் குழு ஒன்றினைத் தோற்றுவித்து பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஊழியர் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | III. 2002 நவம்பர் 28 ஆந் திகதி IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் | கணனி மற்றும் அது தொடர்பான துணைக் கருவிகளுக்காக தனியான கணனி நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முகாமைத்துவச் சபையின் செயற்பாடுகள் ரூபா 2,483,781 பற்றாக்குறையினை விளைவித்துள்ளதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 894,478 ஆக இருந்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 1,589,304 ஆல் அதிகரித்தமைக்கு ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 2,731,127 ஆலும் முன்னைய ஆண்டிற்கான செம்மையாக்கல்கள் ரூபா 1,211,256 ஆலும் அதிகரித்தமையே காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பாதீட்டின் பிரகாரம் மூலதனச் செலவு ரூபா 50 மில்லியனாக இருந்தது. அச்செலவுகள் சீனா அரசாங்கத்தின் மூலம் ரூபா 45 மில்லியனும் இலங்கை அரசாங்கத்தின் மூலம் ரூபா 05 மில்லியனுமாகப் பெற்றுக்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டின் போது இலங்கை அரசாங்கத்தின் மூலதன நிதி ஏற்பாடாக ரூபா 2.32 மில்லியன் கிடைத்திருந்ததுடன் அதில் ரூபா 1.507 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. சீனா அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 45 மில்லியன் பணத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு முகாமைத்துவத்திற்கு முடியாதிருந்ததன் காரணமாக அந்த நிதி ஏற்பாடுகளின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளான நீதி மன்ற கட்டிடத்தினைப் பராமரித்தல், திருத்தம் செய்தல் என்பவற்றில் எச்செயற்பாட்டினையும் ஆண்டின் போது பூர்த்திசெய்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 29 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் ஆண்டின் போது 09 செயற்பாடுகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன.

### 3.2 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

மீளாய்வாண்டின் போது வெற்றிடமாகக் காணப்பட்ட 06 பதவிகளை நிரப்புவதற்கான முறையான திட்டமின்றி பல சந்தர்ப்பங்களில் பத்திரிகை அறிவித்தல்களை வெளியிடுதல் மற்றும் நேர்முகப் பரீட்சைகளை நடாத்தியதன்

காரணமாக ரூபா 532,822 தொகை செலவு செய்யப்பட்டிருந்தும் மேற்கூறிய வெற்றிடங்களில் 02 பதவிகள் நிரப்பப்பட்டிருந்தன.

## 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மின்சாரச் செலவுகள் ரூபா 28,920,894 ஆக இருந்ததுடன் அது மொத்த பயன்படுத்திய செலவில் 87% ஆக இருந்தது. மின்சாரச் செலவு தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையினால் உச்ச நீதிமன்ற தொகுதியின் மண்டபம்/ அறைகள் ஏனைய நிறுவனங்களின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்தும் அந்த நிறுவனங்களின் மின்சாரப் பயன்பாட்டிற்காக கட்டணம் அறவிடப்படாமையினால் அது வருடாந்த மின்சாரச் செலவு அதிகரிப்பதற்குக் காரணமாக இருந்தது.

(ii) மின்சாரப் பாவனையைக் குறைத்தல் மற்றும் காலத்தின் தேவைப்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தி நிரந்தர நிகழ்ச்சித்திட்டத்தை சபை அனுப்பிவைத்திருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) பொருள் இருப்பு
(இ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்
(ஈ) ஒப்பந்தம்
(உ) நிதிக் கட்டுப்பாடு